மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 286/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ரத்தினசாமி | நாள் | 12.10.2022 |
| தகப்பனார் பெயர் | சின்னப்ப கவுண்டர் | | |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை:–**

1) இவ்வழக்கில் பிரதிவாதி மாதப்பன் எனக்கு என்ன உறவு என்றால், மாதப்பன் எனக்கு எவ்வித உறவும் இல்லை. பிரதிவாதி எனக்கு பாத்தியப்பட்ட வண்டிப்பாதையை ஆக்கிரமித்து தடை செய்கிறார். அதனால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

2) மேற்படி வண்டிப்பாதை எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால், சர்வே எண்.1051/3 ல் சர்வே எண்.1051/2 ன் வழியாக சர்வே எண்.1052/2 ன் வழியாகவும், சர்வே எண்.1052/1 ல் உள்ள ரத்தினசாமி பாகத்திற்கு சென்றடைகிறது. மேற்படி விவரத்தை என் வழக்குரையிலும், முதல்விசாரணையிலும் நான் சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன்.

3) சர்வே எண்.1051/3 ல் உள்ள நிலம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், செல்லப்ப கவுண்டர் மகன் பெரியசாமிக்கு பாத்தியப்பட்டது. சர்வே எண்.1051/3 ல் உள்ள நிலத்திற்கு தெற்குபுறம் தார் ரோடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி தார்ரோடு எங்கு செல்கிறது என்றால், கொளத்தூரிலிருந்து சென்னம்பட்டி மெயின்ரோட்டிலிருந்து பிரிந்து செத்தமலைக்கு பாதையாக செல்கிறது.

4) சென்னம்பட்டியிலிருந்து கொளத்தூர் செல்லும் ரோடு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்கிறது. சர்வே எண்.1051/3 க்கு மேற்கு புறம் யாருடைய நிலம் உள்ளது என்றால், பழனியப்பக் கவுண்டர் நிலம் உள்ளது. அவரது தந்தை பெயர் எனக்கு தெரியாது. பழனியப்பக் கவுண்டர் மேற்படி நிலத்தில் பூர்வீகமாக வசித்து வருகிறார்.

5) மேற்படி சர்வே எண்களின் வழியாக செல்லும் பாதை தார் சாலையா, மண்சாலையா என்றால், மண் சாலை ஆகும். மேற்படி மண்சாலை செத்தமலைக்கு செல்லும் தார்சாலையிலிருந்து எந்த திசையில் உள்ளது என்றால், மேற்படி தார்சாலையிலிருந்து

வடக்கு நோக்கி சென்று சண்முகத்தின் பாகத்தின் வழியாக மேற்கு நோக்கி செல்கிறது. சர்வே எண்.1051/2 க்கு மேற்கில் என்ன சர்வே எண் உள்ளது என்றால், சர்வே எண்.1052/2 அமைந்துள்ளது. சர்வே எண்.1052/4 க்கு கிழக்கில் என்ன சர்வே எண் அமைந்துள்ளது என்றால், சண்முகத்தின் பாதி பாகமும், சர்வே எண்.1051/3 ன் பகுதி பாகமும் உள்ளது.

6) சர்வே எண்.1051/2 ஆனது சண்முகத்திற்கு பாத்தியப்பட்டது. சர்வே எண்.1052/4 ஆனது இவ்வழக்கின் பிரதிவாதி மாதப்பனுக்கு பாத்தியப்பட்டது. சர்வே எண்.1052/2 க்கு சர்வே எண்.1052/3 ஆனது மேற்கு புறமாக அமைந்துள்ளது. சர்வே எண்.1052/2 ன் தெற்கே சர்வே எண்.1052/3 அமைந்துள்ளது என்று சொன்னால், அது தவறானது. சர்வே எண்.1052/4 க்கு வடக்கு திசையில் சர்வே எண்.1052/3 அமைந்துள்ளது.

7) சர்வே எண்.1052/3 க்கு தெற்கில் சர்வே எண்.1052/4 அமைந்துள்ளது என்றால், அது தவறானது. சர்வே எண்.1052/2 க்கு கிழக்கில் சர்வே எண்.1052/1 அமைந்துள்ளது என்று சொன்னால், சரிதான். சர்வே எண்.1051/2 ன் மேற்குபுறமாக செல்லும் மண்பாதை சர்வே எண்.1052/2 ன் வடபுறம் செல்கிறதா என்றால், செல்கிறது. அதே தடம் தெற்கில் சர்வே எண்.1052/4 ல் செல்கிறது என்று சொன்னால், தவறானது.

8) அதேபோல் சர்வே எண்.1051/2 ன் வழியாக செல்லும் மேற்படி தடமானது சர்வே எண்.1052/2 ல் செல்கிறதா என்றால், செல்கிறது. செத்தமலைக்கு செல்லும் தார்ரோடு சர்வே எண்.1051/3 ல் வடபுறம் தொடங்கி சர்வே எண்.1051/2 ல் வடபுறம் சென்று அதன் இறுதிபகுதியில் மேற்குபுறமாக வளைந்து, சர்வே எண்.1052/4, சர்வே எண்.1052/3, சர்வே எண்.1052/1 ஆகிய நிலங்களுக்கு செல்கிறது என்றால், சரியல்ல. சர்வே எண்.1052/4 க்கும், சர்வே எண்.1052/3 க்கும் மேற்படி தடம் கிடையாது.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.